# அறந்தாங்கி நகராட்சி

## நகர்மன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

**ஸ்ரீ விகாரி வருடம் ஆனி மாதம் 13–ஆம் நாள் ஜீன் மாதம் 28.06.2019ம் நாள் வெள்ளிக் கிழமை காலை 12.30 மணிக்கு நடைபெற உள்ள சாதாரண கூட்டப் பொருள் விபரம்**

| | | |
|---|---|---|
| **பொருள் எண். 1** | நகராட்சி ஆணையர் அவர்களின் மார்ச், ஏப்ரல் மற்றும் மே –2019ம் மாதத்திற்கான நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–**<br>பதிவு செய்யலாம் | **தீர்மான எண்:–** 1<br>**தீர்மானம்:–** பதிவு செய்யப்பட்டது |
| **பொருள் எண். 2** | நகராட்சி பொறியாளர் அவர்களின் மார்ச், ஏப்ரல் மற்றும் மே –2019ம் மாதத்திற்கான நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–**<br>பதிவு செய்யலாம் | **தீர்மான எண்:–** 2<br>**தீர்மானம்:–** பதிவு செய்யப்பட்டது |
| **பொருள் எண். 3** | இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகள் –2016ன் படி பணிகள் நடைபெற்று வருகிறது. புதுக்கோட்டை ரோடு கலவை உரக்கிடங்கு, எல்.என்.புரம் நுண் உரக்கிடங்கு, என்.ஜீ.ஓ. காலணி Onsite compost ஆகிய இடங்களில் மட்கும் குப்பையில் இருந்து இயற்கை உரம் மற்றும் மண்புழு உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இவ்வுரங்களை சலித்து எடுக்கவும், உரம் மற்றும் மண்புழுக்களை பிரிக்கவும், எல்.என். புரம் நுண் உரக்கிடங்கு மற்றும் என்.ஜீ.ஓ. காலணி Onsite compost ஆகிய இடங்களுக்கு இரண்டு சல்லடைகள் தேவைப்படுவதால் இவைகளை வாங்கி பயன்படுத்தவும் இவற்றிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00 லட்சம் (ஒரு லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொதுநிதியில இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்:–** 3<br>**தீர்மானம்:–** அலுவலகக் குறிப்புகள் 1,2 அனுமதிக்கப்பட்டன |

<table>
<tr>
<td><u>பொருள் எண். 4</u></td>
<td>இந்நகராட்சி வீரமாகாளி நீரேற்று நிலைய வளாகத்தில் உள்ள ஆணையர் குடியிறுப்பில் கூடுதல் பணிகள் மேற்கொள்ளவும் கஜா புயல் காரணமாக குடியிறுப்பில் ஏற்பட்ட பாதிப்புகளை சரிசெய்யவும் அனுமதிக்கும், அதற்கான தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.9.50 லட்சத்திற்கும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுலகக் குறிப்பு</u><br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.</td>
<td><u>தீர்மான எண்:–</u> 4<br><u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்புகள் 1,2 அனுமதிக்கப்பட்டன</td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண். 5</u></td>
<td>அறந்தாங்கி நகராட்சியில் தூய்மை இந்தியா இயக்கம், திடக்கழிவு மேலாண்மை திட்டம், 7வது மாநில உயர்மட்ட குழு நிதி 2018–2019ன் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் விளம்பரம் செய்த வகையில் கீழ்கண்டுள்ள விபரப்படி நாளிதழ்களுக்கு உண்டான விளம்பர கட்டணத் தொகை கீழ்கண்டுள்ளவாறு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br>
<table>
<tr><th>வ. எண்</th><th>நாளிதழின் பெயர்</th><th>பில் எண் மற்றும் நாள்</th><th>தொகை</th></tr>
<tr><td>01</td><td>எக்ஸ்பிரஸ் பப்ளிகேசன்ஸ், திருச்சி தினமணி நாளிதழ்</td><td>TRI TN 50046181 நாள்.31.12.2018</td><td>21000.00</td></tr>
<tr><td>02</td><td>எக்ஸ்பிரஸ் பப்ளிகேசன்ஸ், திருச்சி தினமணி நாளிதழ்</td><td>TRI TN 50046732 நாள்.20.01.2019</td><td>20000.00</td></tr>
<tr><td>03</td><td>மாலைமலர் , திருச்சி</td><td>TRY 18030337 நாள்.19.01.2019</td><td>26460.00</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>67460.00</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:–</u><br><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்படி நாளிதழ்களுக்கு அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதனை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.7043/2017/இ1)</td>
<td><u>தீர்மான எண்:–</u> 5<br><u>தீர்மானம்:–</u> அலுவலகக் குறிப்புகள் 1,2 அனுமதிக்கப்பட்டன</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| **<u>பொருள் எண். 6</u>** | இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயக்கப்பட்டு வரும் கீழ் கண்டுள்ள வாகனங்களுக்கு 2019–20 ம் ஆண்டிற்கு உண்டான தகுதிச்சான்று பெறவும் வாகன பராமரிப்பு பணிகள் செய்யவும் ஆயுள் காப்பீடு பிரீமியம் செலுத்தவும் அனுமதிக்கும் உத்தேச செலவினம் ரூ.10.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. டி.என்.55. பி. 1852 – டிப்பர் லாரி<br>2. டி.என்.55. சி. 4730 – மினி லாரி<br>3. டி.என்.55.எச்.9239 – கழிவுநீர் அகற்றும் வாகனம்<br>4. டி.என்.55.பி.9353 – டிப்பர் லாரி<br>5. டி.என்.55.ஏ இசட் 5800 – டம்பர் பிளேசர் வாகனம்<br>6. டி.என்.55 எஸ் 3520 – டம்பர் பிளேசர் வாகனம்<br>7. டி.என்.55 ஆர் 1012 1020 – டிராக்டர்<br>8. டி.என்.55 ஏ.டி.9117 – ஜே.சி.பி<br>9. டி.என்.55 பி.இசட் 0160 – டிப்பர் லாரி.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி தொகை பொது நிதியிலிருந்து செலவு செய்ய அனுமதிக்கலாம் | **<u>தீர்மான எண்:–</u>** 6<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலகக் குறிப்புகள் 1,2 அனுமதிக்கப்பட்டன |
| **<u>பொருள் எண். 7</u>** | இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் துப்புரவு பணிகளுக்கு தளவாட சாமான்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் தேவைப்படுவதால், தளவாட சாமான்கள் மற்றும் பாதுகாப்பு உபகாரணங்கள் வாங்க அதற்கான உத்தேச், செலவுத்தொகை ரூ. 9.00 லட்சத்திற்கு (ரூபாய் 9 லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது நிதியில் இருந்து இப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | **<u>தீர்மான எண்:–</u>** 7<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலகக் குறிப்புகள் 1,2 அனுமதிக்கப்பட்டன |

| | | |
|---|---|---|
| **<u>பொருள் எண். 8</u>** | அறந்தாங்கி நகராட்சி மூலம் செயல்படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினசரி இந்நகராட்சி பகுதிகளில் சேகரமாகும் 8.4 MT மக்கும் குப்பைகளில் இருந்து இயற்கை உரம் மற்றும் மண்புழு உரம் தயாரிக்கப்பட்டுவருகிறது. தற்போது குப்பைகளின் அளவு அதிகமாக உள்ளதாள் மேற்படி மண்புழு உரம் தயாரிக்க மண்புழு தேவைப்படுவதால் 200 கிலோ மண்புழு வாங்க அதற்கான உத்தேச், செலவுத்தொகை ரூ.1.00 லட்சத்திற்கு (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது .<br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது நிதியில் இருந்து இப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | **<u>தீர்மான எண்:–</u>** 8<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலகக் குறிப்புகள் 1,2 அனுமதிக்கப்பட்டன |
| **<u>பொருள் எண். 9</u>** | அறந்தாங்கி நகராட்சி மூலம் செயல்படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மைதிட்டத்தின் கீழ் தினசரி இந்நகராட்சி பகுதிகளில் சேகரமாகும் 8.4 MT மக்கும் குப்பைகளில் இருந்து இயற்கை உரம் மற்றும் மண்புழு உரம் தயாரிக்கப்பட்டுவருகிறது.இக்குப்பைகளை விரைவாக மக்க வைக்க E.M. Solution தெவைப்படுவதால் 100 லிட்டர் E.M Solution வாங்க அதற்கான உத்தேச், செலவுத்தொகை ரூ.1.00 லட்சத்திற்கு (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது .<br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது நிதியில் இருந்து இப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | **<u>தீர்மான எண்:–</u>** 9<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலகக் குறிப்புகள் 1,2 அனுமதிக்கப்பட்டன |
| **<u>பொருள் எண். 10</u>** | மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2018 ஜீன் 5 ஆம் நாளன்று தமிழக சட்டமன்ற பேரவையில் 110 விதியின் கீழ் தமிழ்நாடு மாநிலமானது பயன்படுத்தப்பட்டு வீசப்படும் நெகிழியை தடை செய்யும் பொருட்டு 1986 ஆம் ஆண்டு சுற்று சூழல் (பாதுகாப்பு சட்டத்தின்படி மைய சட்டம் 29/1986) 2019 ஜனவரி 1ல் இருந்து நடைமுறையில் பயன்படுத்தப்படும் நெகிழி பொருட்களை உற்பத்தி செய்வதை, விற்பனை செய்வதை, போக்குவரத்து செய்வதை, சேமித்து வைத்தலை ,பகிர்ந்தளித்தலை மற்றும் பயன்பாட்டினை தடைசெய்து அறிவிப்பு வெளியிட்டார்கள். இந்த நோக்கத்திற்காக அரசானது அரசாணை எண். 84 நாள்.25.06.2018 ன்படி அரசாணை வெளியிட்டுள்ளது . இந்த அரசாணையினை செயல் ரீதியாகவும், பயன்படுத்தப்படும் மற்றும் தூக்கி வீசப்படும் , நெகிழி பொருட்களை தடை செய்வதை நிறைவேற்றும் பொருட்டு மேலே கூறப்பட்ட | **<u>தீர்மான எண்:–</u>** 10<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

நெகிழிப்பொருட்களை தடை செய்வது தொடர்பாக வகை முறைகளை மீறும் போது பணத்தண்டம் விதிப்பதற்கு ஏதுவாக தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920** ல் கீழ்கண்டவாறு திருத்தம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

## பகுதி III

1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கு திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் V/1920

306ஆம் பிரிவிற்கான திருத்தம்

6. 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் பின்பு (இதில் இதன் பின்பு இந்தப்பகுதியில் 1920 ஆம் ஆண்டு சட்டம் என சுட்டப்பட்டுள்ளவாறு) 306 ஆம் பிரிவில் (28) ஆம் கூறுக்கு பின்பு பின்வரும் கூறு புகுத்தப்படுதல் வேண்டும்.

"(28-A) பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை (Plastic) சேகரித்தலை, வழங்குதலை கொண்டு செல்லுதலை, விற்பனை செய்தலை மற்றும் பகிர்ந்தளித்தலை தடை செய்வதற்காக,"

308ஆம் பிரிவிற்கான திருத்தம்

7. 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 308 ஆம் பிரிவில

(a) கூறில் "ஐம்பது ரூபாய்" மற்றும் "பதினைந்து ரூபாய்" எனும் சொற்றொடருக்காக "ஓராயிரம் ரூபாய்" மற்றும் "இருநூற்று ஐம்பது ரூபாய்" எனும் சொற்றொடர் முறையே மாற்றாக அமைத்தல் வேண்டும்.

(b) கூறில் "பத்து ரூபாய்" எனும் சொற்றொடருக்காக "இருநூறு ரூபாய்" எனும் சொற்றொடர் மாற்றாக அமைக்கபடுதல் வேண்டும்.

8. 1920 ஆம் ஆண்டு சட்டத்தின் 308 ஆம் பிரிவிற்குப் பின்பு பின்வரும் பிரிவைப் புகுத்துதல் வேண்டும் அதாவது :-

308 -A. பயன்படுத்திய தூக்கி எரிகின்ற நெகிழியை தடைசெய்யும் துணை விதிகளை மீறியதற்கான தண்டம். -

306 ஆம் பிரிவின் (28-A) கூறின் படி, துணைவிதியை இயற்றுகையில் 308 ஆம் பிரிவில் எது எவ்வாறு காணப்படினும், மன்றமானது துணை விதிகளை மீறுகின்ற

நபர் எவரும் VIII – A ஆம் இணைப்பு பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மன்றத்தால் நிர்ணயம் செய்யலாகும் தொகைக்கு மிகாத பணத்தண்டம் என்ற முறையில் செலுத்துவதற்கு கடப்பாடு உடையவராதல் வேண்டும் என்பதற்கு வகை செய்யலாம். நபர் நான்காவது முறையாக மீறுவாரானால், இந்தசட்டத்தின்படி வழங்கப்பட்டுள்ள வணிக உரிமத்தை இரத்து செய்தல் வேண்டும்".

VIII – A எனும் புதிய இணைப்பு பட்டியலை புகுத்துதல்

1920 ஆம் ஆண்டு VIII ஆம் இணைப்பு பட்டியலுக்குப் பின்பு பின்வரும் இணைப்பு பட்டியலை புகுத்துதல் வேண்டும்

அதாவது : -

**இணைப்பு பட்டியல் VIII – A**

பிரிவு 306 (28 - A) இதன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்

| வரிசை எண் | குற்றங்கள் | முதன் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல் வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல். | இருபத்தைந்தாயிரம் ரூபாய் | ஐம்பதாயிரம் ரூபாய் | ஒரு லட்சம் ரூபாய் |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>2</td><td>வணிக வளாகங்கள் துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல்.</td><td>பத்தாயிரம் ரூபாய்</td><td>பதினைந்தாயிரம் ரூபாய்</td><td>இருபத்தைந்தாயிரம் ரூபாய்</td></tr>
<tr><td>3</td><td>மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல்.</td><td>ஓராயிரம் ரூபாய்</td><td>இரண்டாயிரம் ரூபாய்</td><td>ஐந்தாயிரம் ரூபாய்</td></tr>
<tr><td>4</td><td>சிறிய வணிக விற்பனையாளர்களால் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல்</td><td>ஒரு நூறு ரூபாய்</td><td>இருநூறு ரூபாய்</td><td>ஐநூறு ரூபாய்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு:
மன்றம் அனுமதிக்கலாம்
</td>
<td></td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண். 11</u></td>
<td>
இந்நகராட்சி ஆணையர் அறை மற்றும் ஆணையர் குடியிறுப்பில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.டி.வி. கேமராவில் பதிவாகும் காட்சிகளை பார்வையிட 55’’ எச்.டி.எம்.ஐ. உள்ளீடு கொண்ட 2 எண்ணிக்கை டி.வி.க்கள் வாங்கிட அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேற்படி செலவினத்தை இந்நகர்மன்ற தீர்மான எண்.245 நாள்.28.03.2018ல் அனுமதிக்கப்பட்டுள்ள கணினி மற்றும் தொடர்பான செலவினங்களுக்கான தொகை ரூ.5.00லட்சத்திலிருந்து செலவிடவும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
மேற்படி டி.வி.க்கள் வாங்கிட 24.04.2019 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>தொகை / ஒரு எண்ணிக்கை</th></tr>
<tr><td>1)</td><td>பாவா எலெக்ட்ரானிக்ஸ்,<br>27 /2, தாலுக்கா அலுவலக சாலை, அறந்தாங்கி</td><td>ரூ.42,500.00</td></tr>
</table>
</td>
<td><u>தீர்மான எண்:–</u> 11<br><u>தீர்மானம்:–</u> அலுவலகக் குறிப்புகள் 1,2,3 அனுமதிக்கப்பட்டன</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 2) | செல்சிட்டி,<br>அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி சாலை, அறந்தாங்கி | ரூ.40,999.00 |
| 3) | பிஸ்மி ஸ்டோர்,<br>27, தாலுக்கா அலுவலக சாலை, அறந்தாங்கி | ரூ.42,000.00 |

**<u>அலுவலகக் குறிப்பு:–</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி டி.வி. க்கள் எம்.ஐ. டி.வி. அங்கீகரிப்பட்ட விற்பனையாளர் செல் சிட்டி, அறந்தாங்கி நிறுவத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதனை மன்றம் ஏற்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று டி.வி.க்கள் வாங்க அனுமதி பெற்றதனையும், விலைப்புள்ளிகளை ஏற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

**<u>பொருள் எண். 12</u>**

இந்நகராட்சியில் அவசர அவசியம் கருதி கீழ்கண்ட பணிகளை நகராட்சிகளின் சட்டம் பிரிவு–15ன் கீழ் செய்யப்பட்டதையும் அதற்கான செலவினங்களுக்கும் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | முகவரி | விபரம் | செலவினம் (ரூபாய்) |
|---|---|---|---|
| 1. | பி. ஆனந்த், கொசு மருந்து புகை இயந்திரம் சர்வீஸ் சென்டர், எஸ்.பி.ஐ. காலணி, பெரிய குளம் | இந்நகராட்சி ஆணையர் அவர்களின் உத்திரவு ந.க.எண். 5371/2018/எச்1 நாள்.17.12.2018ன் படி டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை புகை இயந்திரம் பழுது நீக்கம் செய்த வகையில் | 76000.00 |
| 2 | எம்.எம். ஆட்டோமேசன், சேலம் | சொத்து வரி சீராய்வு பணி மேற்கொள்ளும் பொருட்டு சிறப்பு அறிக்கை மற்றும் சொத்து வரி கணக்கீட்டு தாள் படிவம் பிரிண்ட் எடுக்க தேவையான ஜெராக்ஸ் மிசின் டோனர் வாங்கிய வகையில் உண்டான செலவினம் | 20104.00 |
| 3. | திரு.சி.சேகர், துப்புரவு ஆய்வர் | பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாம் நடத்திய வகையில் உண்டான செலவினம் | 13398.00 |

**<u>தீர்மான எண்:–</u>** 12

**<u>தீர்மானம்:–</u>** அலுவலகக் குறிப்பு பதிவு செய்யப்பட்டது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 4 | திரு.சி.சேகர், துப்புரவு ஆய்வர் | திடக்கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் சுகாதார பணிகள் புகைபடம், பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு குறித்த அறிக்கை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பிய வகையில் | 14244.00 | |
| | 5 | திரு.டி.மெய்ஞானம், ஒப்பந்ததாரர் | ந.க.எண்1273/2019/இ1 புதிய மோட்டர், மற்றும் மின் உபகரணங்கள் சப்ளை செய்த வகையில் | 283745.00 | |
| | 6 | திரு. சி. சேகர், துப்புரவு ஆய்வாளர் | பல்ஸ் போலியோ மற்றும் தேர்தல் சுவர் விளம்பரம் அழிக்கும் பணிக்கு சுண்ணாம்பு மற்றும் பிரஸ், கலவை உரக்கிடங்கில் குப்பை பிரித்து இயந்திரம் பழுது நீக்கம் செய்யவும், குப்பை அறைக்கும் இயந்திரம் சர்வீஸ் செய்யவும், மரம் அறுக்கும் இயந்திரம் சர்வீஸ் செய்யவும், பொது சுகாதார பிரிவு மூல் செலவு மேற்கொண்ட வகையில் | 24811.00 | |
| | 7 | சி.சேகர், துப்புரவு ஆய்வர் | அலுவலகத்தில் பரப்புரையாளர்கள், மேற்பார்வையாளர் அறைக்கு புதிய பிளாஸ்டிக் நாற்காலிகள் வாங்கிய வகையில் | 6900.00 | |
| | 8. | திரு. ஆர்.ராஜசேகர், பணி ஆய்வர் | கசடு கழிவு மேலாண்மை திட்டப்பணி தொழிற் நுட்ப அனுமதி பெற விரிவான திட்ட அறிக்கை கயேடு தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு அளித்து அனுமதி பெற்ற வகையில் | 3493.00 | |
| | 9. | திரு. ஆர்.ராஜசேகர், பணி ஆய்வர் | பாரளுமன்ற சாதாரண தேர்தல் வாக்காளர் வி.வி.பேட் இயந்திரம் குறித்து விழிப்புணர்வு பிளக்ஸ், சாமியானா, சேர் வாடகை வகையில் | 2880.00 | |
| | 10. | திரு. ஏ.முத்துக்குமார், சிவசக்தி ரீவைண்டிங் ஒர்க்ஸ், அறந்தாங்கி | வெள்ளாறு நீரேற்று நிலைய ஆழ்குழாய் கிணறு 20 எச்.பி. நீர்மூழ்கி மோட்டார் பழுது நீக்கம் செய்த வகையில் | 17150.00 | |
| | 11. | திரு. ஏ.முத்துக்குமார், சிவசக்தி ரீவைண்டிங் ஒர்க்ஸ், அறந்தாங்கி | என்.ஜி.ஜி.ஓ. காலனி நீரேற்று நிலைய ஆழ்குழாய் கிணறு 20 எச்.பி. நீர்மூழ்கி மோட்டார் பழுது நீக்கம் செய்த வகையில் | 18200.00 | |
| | 12. | திரு. ஏ.முத்துக்குமார், சிவசக்தி ரீவைண்டிங் ஒர்க்ஸ், அறந்தாங்கி | நாடிமுத்து நீரேற்று நிலைய ஆழ்குழாய் கிணறு 20 எச்.பி. நீர்மூழ்கி மோட்டார் பழுது நீக்கம் செய்த வகையில் | 19050.00 | |

| | | | |
|---|---|---|---|
| 13. | திரு. ஏ.முத்துக்குமார், சிவசக்தி ரீவைண்டிங் ஒர்க்ஸ், அறந்தாங்கி | பெரியார் நீரேற்று நிலைய ஆழ்குழாய் கிணறு 20 எச்.பி. நீர்மூழ்கி மோட்டார் பழுது நீக்கம் செய்த வகையில் | 18100.00 |
| 14. | வே. சரவணன், ஓட்டுநர், | TN 55 S 3520 டம்பர் பிளேசர் வாகனம் தகுதிச்சான்று கட்டணம் பசுமைவரி கட்டணம் செலுத்தி தகுதிச்சான்று பெற்ற வகையில் உண்டான செலவினம் | 2870.00 |
| 15. | க.ஆத்மநாதன், துப்புரவு பணி மேற்பார்வையாளர் | திடக்கழிவு மோலாண்மை திட்டத்தின் கீழ் என்.ஜி.டி. அனுமதி பெற தேசிய பசுமை தீர்பாயம், அறந்தாங்கி நகராட்சி செயல்படும் செயல் திட்ட அறிக்கை 20 புக்லெட் தயார் செய்ய உண்டான செலவினம் | 20900.00 |
| 16. | எம். அன்பு மதி, ஓட்டுநர் | டம்பர் பிளேசர் மட்கும் குப்பை வாகனத்தில் ஏற்றப்பட்டு மற்றும் வாகனம் மட்டும் எடை போட்ட வகையில் உண்டான செலவினம் | 420.00 |
| 17. | Max in India Machinary Manufacturer, Coimbature. (அ.இளங்கோ, துப்புரவு பணி மேற்பார்வையாளர் ) | ஷெர்டிங் மெசின் பழுது நீக்கம் செய்த வகையில் உண்டான செலவினம் | 46728.00 |

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

பதிவு செய்யலாம்

**<u>பொருள் எண். 13</u>**

இந்நகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள 7 நீரேற்று நிலையங்களில் கழிவறை அமைக்கவும், பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் அனுமதிக்கும், அதற்கான தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.10.00 லட்சத்திற்கும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்:–</u>** 13

**<u>தீர்மானம்:–</u>** அலுவலகக் குறிப்பு 1,2 அனுமதிக்கப்பட்டன

<table>
<tr>
<td><u>பொருள் எண். 14</u></td>
<td>
நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதம் ந.க.எண். 48800/2006/எல் நாள்20.06.2019ல், தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி என்ற பணியமைப்பின் கீழ் புதிய பணியிடங்களை உருவாக்குவது தொடர்பாகவும், அதற்கு ஈடாக சில பணியிடங்களை திரும்ப ஒப்படைப்பது தொடர்பாகவும் விபரங்கள் தரப்பட்டுள்ளன.<br>
நகராட்சிகளின் கணக்குகளை இன்றைய தேவைக்கேற்ப பராமரிக்கவும், நிதி மேலாண்மையை திறம்படுத்தவும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி என்ற பணியமைப்பு உருவாக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 1.04.2013 அன்று சட்ட மன்றத்தில் அறிவித்தார் என்றும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணி உருவாக்குவதற்கான தீர்மானங்களை அனைத்து நகராட்சிகளும் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பிவைத்துள்ளனஎன்றும், அத்தீர்மானங்கள் 13.06.2013 அன்று அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டன என்றும், இதனடிப்படையில் அரசாணை (எம்எஸ்) எண் 26, நகராட்சி நிர்வாக (ம) குடிநீர் வழங்கல் துறை (எம் இ1) நாள்.10.02.2016ல் தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பிற்கான பணி விதிகள் (Tamil Nadu Municipal Accounts Service Rules) 2016 உருவாக்கப்பட்டு 11.02.2016 அன்று அரசு கெஜட்டில் வெளியிடப்பட்டது என்றும், நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>
2) மேலும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பின் கீழ் பணியிடங்களை புதிதாக உருவாக்க ஏதுவாக செம்பாக்கம், வாலாஜாப்பேட்டை, வந்தவாசி மற்றும் கீழக்கரை நகராட்சிகள் தவிர அனைத்து நகராட்சிகளும் தலா ஒரு இளநிலை உதவியாளர் பணியிடத்தை திரும்ப ஒப்படைத்து (Surrender) தீர்மானம் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்தன என்றும் அத்தீர்மானங்கள் 07.07.2017 அன்று அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>
3) தற்போது தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணியின் (Tamil Nadu Municipal Accounts Service ) கீழ் <u>முதல்நிலை நகராட்சிகளுக்கு</u> ஒவ்வொரு நகராட்சிக்கும் கீழ்கண்டவாறு புதிய பணியிடங்கள் உருவாக்கிட திருத்திய கருத்துரு அரசுக்கு 03.01.2019 அன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>
<table>
<tr><td>முதுநிலை கணக்கர்</td><td>Senior Accountant</td><td>1</td></tr>
<tr><td>கணக்கு உதவியாளர்</td><td>Accounts Assistant</td><td>1</td></tr>
</table>
</td>
<td><u>தீர்மான எண்:–</u> 14<br><u>தீர்மானம்:–</u> அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | மேற்கண்டவாறு Tamil Nadu Municipal Accounts Service பணியமைப்பில் கணக்குப் பணிக்கான பிரத்யேக பணியிடங்களை உருவாக்குவதற்கு ஈடாக ஏற்கனவே தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணியில் (Tamil Nadu Municipal General Service) கணக்கு பணி தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள பணியிடம் / பணியிடங்களையோ அல்லது வேறு பணியிடத்தையோ ஒவ்வொரு நகராட்சியும் கூடுதல் சம்பள செலவினை தவிர்க்கும் பொருட்டு திரும்ப ஒப்படைக்க வேண்டியுள்ளது என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். இந்நகராட்சிகளில் கீழ்காணும் பணியிடத்தினை திரும்ப ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>இளநிலை உதவியாளர் பணியிடம் ஒன்று<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br><br>மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண். 4093/2017/சி1) | |
| **<u>பொருள் எண். 15</u>** | திடக்கழிவு மேலாண்மைதிட்டத்தின் கீழ் தினசரி இந்நகராட்சி பகுதிகளில் சேகரமாகும் மக்கும் குப்பைகளில் இருந்து மண்புழு உரம் தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. 1 கிலோ மண்புழு உரம் ரூ. 8 /– (எட்டு ரூபாய்)க்கும், 1000கிலோவிற்கு மேல் வாங்குபவர்களுக்கு ரூ.6/– (ஆறு ரூபாய்)க்கும் விற்பனை செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**<br><br>மன்றம் அனுமதிக்கலாம் | **<u>தீர்மான எண்:–</u>** 15<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **<u>பொருள் எண். 16</u>** | அறந்தாங்கி நகாரட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 27 வார்டுகளிலும் குப்பைகள் சேகரிக்கப்பட்டு மக்கும் குப்பை மக்காத குப்பைகள் பிரித்தெடுக்கப்பட்டு இயற்கை உரம் தயார் செய்யப்பட்டு வருகிறது . | **<u>தீர்மான எண்:–</u>** 16<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

மேலும் வீடுகள் மற்றும் பள்ளிகளில் சேகரிக்கப்படும் குப்பைகளில் அபாயகரமான மற்றும் நோய் தொற்று ஏற்படுத்தும் கழிவுகள் (நாப்கின்ஸ் மற்றும் குழந்தைகள் பேம்பர்ஸ்) முறையாக அழிப்பதற்கு தேவையான Napking incinerator Burning Mechin கீழ்காணும் விபரப்படி தேவைப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| 1. | அரசு பெண்கள் மேல்நிலைபள்ளியில் 1500 மாணவிகள் மற்றும் 80 ஆசிரியர்கள் பயன்படுத்தப்படும் நாப்கின்கள் சுகாதார முறைப்படி அழிக்கும் வகையில் | – | நாள் ஒன்றுக்கு 600 பேட்கள் அழிக்கும் திறம் கொண்டதிள் எண்ணம் – 1 |
| 2. | கலவை உரக்கிடங்கில் நகரில் சேகரமாகும் நாப்கின்களை அழிக்கும் வகையில் | – | நாள் ஒன்றுக்கு 600 பேட்கள் அழிக்கும் திறம் கொண்டதிள் எண்ணம் – 1 |
| 3. | 1. எல்.என்.புரம் நடுநிலைபள்ளி<br>2.நகராட்சி மேற்கு பள்ளி<br>3.நகராட்சி கிழக்கு பள்ளி | – | 3 பள்ளிகளுக்கும் தலா 60 பேட்கள் நாள் ஒன்றுக்அழிக்கும்வகையில் 3 எண்ணம் |

மேற்காணும் விகிதப்படி 600 பேட்கள் அழிக்கும் திறன் கொண்ட இயந்திரம் 2, மற்றும் 60 பேட்கள் அழிக்கும் திறன்கொண்ட இயந்திரம் 3, மொத்தம் 5 இயந்திரங்கள் கொள்முதல் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 350000 க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிகலாம்
2. மேற்காணும் இயந்திரங்கள் கல்வி நிறுவனங்களின் உபயோகத்திற்கு பயன்படுத்துவதால் செலவினத்தை கல்வி நிதியலிருந்து மேற்கௌ்ள மன்றம் அனுமதிகலாம்

| | | |
|---|---|---|
| **<u>பொருள் எண். 17</u>** | அறந்தாங்கி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு தேவையான கிருமிநாசினி பொருட்கள் (பிளிச்சிங்பவுடர், சுண்ணாம்புதூள், பினாயில்) வாங்குவதற்கும் ரூ.6.00 லட்சம் மன்ற தீர்மான எண்:11 நாள்:16.4.2019ன் படி அனுமதி பெறப்பட்டு தற்போது ரூ.17,500/– கூடுதலாக செலவு செய்யப்பட்டதால் கூடுதல் தொகை ரூ.17,500/– க்கு மன்றத்தின் அனுமதி பெறவும் மேலும் 2019–20ஆம் ஆண்டிற்கு தேவையான கிருமிநாசினி பொருட்கள் (பிளிச்சிங் பவுடர் சுண்ணாம்புதூள், பினாயில்) வாங்குவதற்கும் உண்டான உத்தேச, செலவினம் ரூ.10.00 லட்சத்திற்கு (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2.பொது நிதியில் இருந்து இப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | **<u>தீர்மான எண்:–</u>** 17<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

ஒம்/–இரா.வினோத்
தனிஅலுவலர்
அறந் தாங் கி நகராட் சி